பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

JESUS REDEEMS MINISTRIES

# இயேசு விடுவிக்கிறார்

*Volume: 46 Issue: 12 December 2025 Mohan C. Lazarus Annual Subscription: ₹ 50/- Single Copy: ₹ 5/-*



## இயேசு கிறிஸ்து அதிசயமானவர்!

"... உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்."

மீகா 7:15.

# உங்கள் சகோதரனிடமிருந்து...

அதிசயங்களை செய்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், **உங்களுக்கு என் அன்பின் கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்கள்!**

இந்த பண்டிகை நாட்கள் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க, **உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்**. பண்டிகையின் சந்தோஷத்திற்காக, **கடன் வாங்கி வீண் செலவு செய்யாதீர்கள்**. அதிசயமான இயேசு கிறிஸ்து நம்மோடு கூட இருப்பதுதான் உண்மையான சந்தோஷம்!

கடந்த (2025) நவம்பர் மாதம் **மியான்மர்** (பர்மா) தேசத்தில் நடைபெற்ற ஊழியங்களை கர்த்தர் அபரிவிதமாக ஆசீர்வதித்து, அனேக அற்புத-அடையாளங்களை செய்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து, **இஸ்ரேல்** தேசத்திற்கு குழுவாக கடந்து சென்று, அந்த தேசத்திற்காக **7 நாட்கள் உபவாசித்து ஜெபிக்க** கர்த்தர் கிருபை செய்தார். அந்த தேசத்திற்காக ஜெபித்த நம்முடைய ஜெபத்தின் வல்லமையை அங்கு பார்க்க முடிந்தது. இஸ்ரேல் தேசம் இரட்சிக்கப்பட, அந்த தேசத்தில் சமாதானம் காணப்பட, தொடர்ந்து நீங்களும் **ஜெபியுங்கள்**.

**வருகிற 2026 ஜனவரி 1ம் தேதி**யன்று, நாலுமாவடி-**தேவனுடைய கூடாரத்தில்** நடைபெற இருக்கிற **வாக்குத்தத்தக் கூட்டத்தில்** கலந்து கொண்டு, புத்தாண்டிற்கான கர்த்தருடைய வாக்குத்தத்த ஆசீர்வாத செய்தியை கேட்டு நீங்கள் ஆசீர்வதிக்கப்பட, **உங்களை அன்போடு அழைக்கிறேன்**.

மட்டுமல்ல, வருகிற (2026) **ஜனவரி 14, 15, 16** தேதிகளில், நம் **தேவனுடைய கூடாரத்தில் தீர்க்கதரிசன ஜெப முகாம்** நடைபெற இருக்கிறது. அதில் கர்த்தர் வெளிப்படுத்தி இருக்கிற காரியங்களுக்காக ஜெபிக்கப் போகிறோம். **உங்கள் வருகையை** இப்பொழுதே **முன்பகுதி செய்து கொள்ளுங்கள்**. இதன் **முழு விபரம் இப்பத்திரிக்கையின் 27வது பக்கத்தில்** கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்களில் நீங்கள் அதிகமாக **கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்**. ஒரு புது வருடத்திற்குள்ளாக செல்ல இருக்கிற நீங்கள், உங்களை அர்ப்பணித்து **ஜெபித்து, புது வருடத்திற்காக ஆயத்தப்படுங்கள்**.

கிருபை உங்களோடிருப்பதாக!



உங்கள் சகோதரன்,

Mohan C L

# இயேசு கிறிஸ்து அதிசயமானவர்!

## “...உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.”

மீகா 7:15.



பிரியமானவர்களே,

இந்த வருடம் (2025) ஜனவரி 1ம் தேதியிலிருந்து இதுவரை, ஒவ்வொரு மாதமும் கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தங்களை கொடுத்து, நம்மை தேற்றி, பெலப்படுத்தி, பாதுகாத்து, ஆசீர்வதித்து, அற்புதமாக நடத்தி, இந்த வருடத்தின் கடைசி மாதத்துக்குள்ளாக கொண்டு வந்திருக்கிறார்! அதற்காக **கர்த்தரை மனதார துதியுங்கள்!**

இந்த மாதம் ஒரு விசேஷித்த மாதம்! வருடந்தோறும் டிசம்பர் 1ம் தேதி வந்து விட்டாலே, உலகம் முழுவதிலும் **கிறிஸ்துமஸ் பண்டிகை**யின் கொண்டாட்டம் ஆரம்பித்து விடும். அதிலும் ஆச்சரியம் என்னவென்றால், கிறிஸ்தவ தேசங்களான ஐரோப்பிய தேசங்கள் மற்றும் அமெரிக்க தேசம் மாத்திரமல்ல, இஸ்லாமிய தேசமான வளைகுடா நாடுகளில் கூட கிறிஸ்துமஸ் பாடல்கள் ஒலிப்பதை இன்றைக்கு கேட்க முடிகிறது!

உலகம் முழுவதும் எல்லா தேசங்களிலும், எல்லா மொழி பேசக் கூடிய மக்கள் மத்தியிலும் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்படுகிறது! ஏனென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட தேசத்திற்குரிய, அல்லது ஒரு குறிப்பிட்ட இனத்திற்குரிய, அல்லது ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் மக்களுக்குரிய கடவுள் அல்ல! அவர் சர்வ லோகத்தின் ஆண்டவர்! அதாவது, இந்த உலகம் முழுமைக்கும் அவர்தான் ஆண்டவர்! அவர் ஒருவர்தான் இந்த உலகத்தின் இரட்சகர்!

எல்லா மக்களுக்கும் இரட்சிப்பை கொண்டு வருவதற்காகத்தான், இயேசு கிறிஸ்து ஒரு சாதாரண மனிதனாக இந்த பூமியில் அவதரித்தார்.

இயேசு கிறிஸ்து பிறந்த ஊர் பெத்லகேம். அதன் அருகில்தான் எருசலேம் பட்டணம் இருக்கிறது. “இந்த இரண்டு பட்டணங்கள் இருக்கிற இடங்கள்தான் இந்த உலகத்திற்கே மையப் புள்ளியாக இருக்கிறது!” என்று சொல்லப்படுகிறது. பாருங்கள்; இந்த உலகத்தை சிருஷ்டித்த உலக நாயகராகிய இயேசு கிறிஸ்து, இந்த உலகத்தின் மையப் புள்ளியில் அவதரித்தார்! அங்குதான் அவர் சிலுவையில் அறையப்பட்டு, நமக்காக இரத்தம் சிந்தி, மரித்து, உயிர்த்தெழுந்தார்!

இதையெல்லாம் நாம் கவனித்துப் பார்க்கும்போது, சரித்திர பூர்வமாகவும், பரிசுத்த வேதாகமத்தின்படியாகவும் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், “**இயேசு கிறிஸ்து அதிசயமானவர்!**” என்பது நமக்கு விளங்கும்.

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் அவதரித்து வந்தபோது, "...; **அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.**" (ஏசாயா 9:6) என்று, அவருக்கு பல பெயர்கள் கொடுக்கப்பட்டது.

அந்தப் பெயர்களில் ஒரு அற்புதமான பெயர்தான், '**அதிசயமானவர்!**' அவருடைய பிறப்பு அதிசயம்! அவருடைய ஊழியங்கள் அதிசயம்! அவர் செய்த அற்புதங்கள் அதிசயம்! அவருடைய பேச்சு அதிசயம்!

அவரைப் பிடித்து கொண்டு வரப் போன சேவகர்கள் திரும்பி வந்து, "...: **அந்த மனுஷன்** (இயேசு கிறிஸ்து) **பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை...**" (யோவான் 7:46) என்று பரிசேயரிடத்தில் சொன்னார்கள்.

மரித்தோரை மறுபடியும் அவர் உயிரோடு எழுப்பியது, அதிசயம்! பிறவிச் சப்பாணிகளை அவர் நடக்க வைத்தது, அதிசயம்! பிறவிக் குருடர்களுக்கு அவர் பார்வையளித்தது, அதிசயம்! **பரிசுத்தத்தை குறித்தும், அன்பை குறித்தும், தாழ்மையை குறித்தும், தியாகத்தை குறித்தும் அவரைப்போல இதுவரை வேறு யாரும் பேசியதில்லை!** அவரைப்போல இதுவரை யாரும் வாழ்ந்து காண்பித்ததும் இல்லை! என்றென்றும் அவருக்கு நிகர் அவர் மட்டும்தான்!

அப்படிப்பட்ட அதிசயமான கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றைக்கு, "... **உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.**" (மீகா 7:15) என்று உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறார்.

எனக்கு அன்பானவர்களே, **இந்த மாதத்தில் உங்கள் வாழ்க்கையில் ஒரு அதிசயம் நடக்கப் போகிறது!** நீங்கள் இந்த வருடம் முழுவதும் ஏதோவொரு காரியத்தை எதிர்பார்த்து, எதிர்பார்த்து, "ஒன்றும் நடக்கவில்லையே!' என்று எண்ணி கலங்கிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா?



**கலங்காதிருங்கள்!** ஏனென்றால், **இந்த மாதத்தில் உங்களுக்கு ஒரு அதிசயம் நடக்கப் போகிறது!**

உங்கள் தனிப்பட்ட காரியத்தில், உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில், உங்கள் குடும்ப காரியத்தில், உங்கள் தொழில் காரியத்தில், உங்கள் வேலையில், உங்கள் பிள்ளைகள் காரியத்தில், நீங்கள் செய்கிற ஊழியத்தில் அதிசயம் நடக்கப் போகிறது!

நீங்கள் எதிர்பார்க்கிற அதிசயத்தை கர்த்தர் உங்களுக்கு செய்யப் போகிறார்! ஏனென்றால், அவர் அதிசயமான தேவன்! அவர் அதிசயங்களை செய்கிற தேவன்! இன்றைக்கு அந்த அதிசயம் உங்களுடைய வாழ்க்கையில் ஆரம்பிக்கப் போகிறது!

இன்றைக்கு உங்களுக்கு என்ன அதிசயம் நடக்க வேண்டும்? "இதெல்லாம் நடக்கிற காரியமே அல்ல! எதாவதொரு அதிசயம் நடந்தால்தான் உண்டு!" என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? **விசுவாசியுங்கள்!** அந்த காரியத்தில், **கர்த்தர் உங்களுக்கு அதிசயத்தை செய்யப் போகிறார்!** கர்த்தர் உங்களுக்கு அதிசயத்தை செய்ய ஆவலோடு காத்திருக்கிறார். அவர் நம்மோடு கூட இருந்தாலே போதும்; நம்முடைய வாழ்க்கையில் அதிசயங்கள் நடந்து கொண்டேதான் இருக்கும்!

"எப்படிப்பட்ட அதிசயங்களை கர்த்தர் செய்வார்?" என்றால், அது ஏராளமாக இருக்கிறது. அதில் ஒரு 3 அதிசயமான காரியங்களை குறித்து ஆவியானவரின் உதவியோடு நாம் தியானிக்கலாம்.

# அதிசயமாக தடைகள் நீங்கும்!



"... **உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.**" மீகா 7:15.

**மோசே**, இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டு வரும்போது, தொடர்ந்து முன்னேறிப் போக முடியாதபடி அவர்கள் முதலாவது சந்தித்த ஒரு தடை, 'சிவந்த சமுத்திரம்' என்று சொல்லப்படுகிற **செங்கடல்!**

அவர்கள் சிறு கூட்டத்தினர் அல்ல. சுமார் 30 லட்சம் ஜனங்கள்! அவர்கள் மாத்திரமல்ல, அவர்கள் தங்களுடைய ஆடுகள், மாடுகள் மற்றும் ஏராளமான உடைமைகளோடு வந்து, செங்கடல் அருகில் பாளயம் இறங்கி இருந்தார்கள்.

எகிப்து இராஜாவாகிய பார்வோன் இருதயம் கடினப்பட்டவனாக தன்னுடைய இராணுவத்தோடு வந்து, அந்த ஜனங்களை மறுபடியும் தனக்கு அடிமைகளாக்கி கொண்டு போய் விட வேண்டுமென்று, அவர்களை துரத்திக் கொண்டு வந்தான். அதாவது, அவர்களுக்கு பின்பாக ஒரு பெரிய ஆபத்து தொடர்ந்து வந்தது! அவர்களுக்கு முன்பாக அவர்கள் முன்னேறி கடந்து போக முடியாதபடி செங்கடல் தடையாக இருந்தது!

இப்படியாக, இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆபத்தான, இக்கட்டான ஒரு சூழ்நிலை உண்டாயிற்று! என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கிப் போய், "வசமாக அகப்பட்டு கொண்டோமே! அவ்வளவுதான்; எல்லாம் முடிந்தது!" என்கிற ஒரு பயங்கரமான சூழ்நிலை அவர்களுக்கு!

ஆனால், அந்த சமயத்தில்தான் கர்த்தர் அவர்களுக்கு ஒரு மாபெரும் அதிசயத்தை செய்தார். அது என்ன அதிசயம்?" என்றால், சுமார் 18 கி.மீ. தூரமும், 100 அடி ஆழமும் கொண்ட அந்த செங்கடலை இரண்டாக பிளந்து, 100 அடி உயரத்தில், 18 கி.மீ. தூரத்திற்கு இரண்டு பக்கங்களிலும் கடல் தண்ணீரை மதிலைப்போல நிறுத்தி, தம்முடைய ஜனங்களை ஈரப்பதமே இல்லாத வெட்டாந்தரையில் நடக்கச் செய்து, கடந்து போகப் பண்ணி, அவர்களை அடிமைப்படுத்த தொடர்ந்து வந்த பார்வோனின் சேனையை அதே கடலுக்குள்ளாக அமிழ்த்தி அழித்துப் போட்டார்! **(யாத்திராகமம் 14ம் அதிகாரம்)**.

அந்த காட்சியை உங்கள் மனக் கண்களுக்கு முன்பாக கொண்டு வந்து நிறுத்திப் பாருங்கள். அது எவ்வளவு பெரிய அதிசயம்! "இதெல்லாம் எப்படி நடந்தது?" என்று கேட்கிறீர்களா? அண்ட சராசரங்களையும் சிருஷ்டித்து, காத்து நடத்தி வருகிற கர்த்தராலே எல்லாம் கூடும்!

அதிசயங்களை செய்கிற கர்த்தர், இன்றைக்கு உங்களுக்கும் செய்வார்! உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற தடைகள் யாவும் நீங்கும்! வழிகள் திறக்கும்! அதிசயம் நடக்கும்!

ஊழியத்தின் நிமித்தமாக நான் ஒரு சமயம் குறிப்பிட்ட ஒரு வளைகுடா தேசத்திற்குப் போயிருந்தேன். ஒருநாள் காலையில் ஒரு சகோதரர் என்னை சந்தித்து ஜெபிக்க வந்திருந்தார். அப்போது நான் அவரிடத்தில், "பிரதர், உங்களுடைய குடும்பம் எங்கே இருக்கிறது?" என்று விசாரித்தபோது, "நான் மட்டும்தான் இங்கு வேலை செய்கிறேன். என் மனைவி, பிள்ளைகள் எல்லோரும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்." என்று சொன்னார்.

உடனே நான், "ஏன் உங்கள் குடும்பத்தை இங்கே அழைத்து வரவில்லை? குடும்பமாக இருக்க வேண்டும் என்றுதானே கர்த்தர் நமக்கு குடும்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்? குடும்பம் பிரிந்திருப்பது கர்த்தருக்கு சித்தமல்ல! குடும்பமாக வாழ்வதுதானே தேவ சித்தம்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "என் குடும்பத்தை இங்கு அழைத்துக் கொண்டு வர எனக்கு விருப்பம்தான் பிரதர். ஆனால் இந்த தேசத்தில் வேலை செய்கிற வெளி தேசத்தைச் சார்ந்த ஒரு மனிதன், தன் குடும்பத்தையும் இங்கு அழைத்துக் கொண்டு வருவதாக இருந்தால், அவனுடைய சம்பளம் இவ்வளவு இருக்க வேண்டுமென்று ஒரு சட்டம் இருக்கிறது. அவ்வளவு சம்பளம் வாங்குகிறவர்களுக்குத்தான் குடும்ப விசா கொடுப்பார்கள்.

எனக்கு அவ்வளவு சம்பளம் கிடையாது. அதனால்தான் என் குடும்பத்தை இங்கு அழைத்துக் கொண்டு வர என்னால் முடியவில்லை!" என்று மிகுந்த வருத்தத்தோடு சொன்னார்.



நான் அவரிடத்தில், "நீங்கள் வாங்குகிற சம்பளம் உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் போதுமானதாக இருக்கிறதா?" என்று கேட்டதற்கு, இன்றைக்கு நான் வாங்குகிற சம்பளம் நாங்கள் குடும்பமாக சம்பூரணமாக வாழ்வதற்கு போதுமானதாகத்தான் இருக்கிறது. ஆனால், இந்த தேசத்தின் சட்டம்தான் எங்களுக்கு தடையாக இருக்கிறது.

இங்குள்ள இமிகிரேஷன் அதிகாரிகளை நான் சந்தித்து, "நான் வாங்குகிற சம்பளம் என் குடும்பத்திற்கு போதுமானதாக இருக்கிறது. ஆகவே, நாங்கள் இங்கு குடும்பமாக வாழ விசா கொடுங்கள்." என்று எத்தனையோ முறை கேட்டும் ஒரு பிரயோஜனமும் இல்லை." என்று சொன்னார்.

உடனே நான் அவரைப் பார்த்து, "நீங்கள் உங்கள் மனைவி, பிள்ளைகளோடு கூட இங்கு வந்து குடும்பமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா?" என்று கேட்டபோது, "ஆம். நான் அதைத்தான் விரும்புகிறேன். ஆனால், இந்த தேசத்தின் சட்டம் அதற்கு தடையாக இருக்கிறதே!" என்று சொன்னார்.

அதற்கு நான், "எந்தத் தடையாக இருந்தாலும், கர்த்தரால் அதை மாற்ற முடியும்!" என்று சொல்லி, அவருக்காக ஜெபித்தேன். அவரும் ஜெபித்து விட்டு கடந்து போனார்.

அன்று மாலையில் நடைபெற்ற கூட்டத்திற்கு அவர் வந்திருந்தார். கூட்டம் முடிந்த பிறகு அவர் என்னை வந்து சந்தித்து, "பிரதர், நீங்கள் ஜெபித்தபடியே ஒரு அதிசயம் நடந்து விட்டது! நான் காலையில் உங்களை சந்தித்து ஜெபித்து விட்டு, நேராக அந்த அலுவலகத்திற்குப் போய், அது சம்மந்தமான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, அங்கிருந்த அதிகாரியிடம் கொடுத்தேன்.

அப்போது அந்த அதிகாரி, "இப்போதுதான் இந்த அரசாங்கம் இந்த சட்டத்தில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்திருக்கிறது. இந்த சட்டத்தின் மாற்றம் இன்றைக்குத்தான் அமுல்படுத்தப்பட்டு இருக்கிறது. அதன்படி இப்போது நீங்கள் வாங்குகிற சம்பளம் போதுமானதாக இருக்கிறபடியினால், உங்கள் குடும்பத்தை நீங்கள் இங்கு தாராளமாக அழைத்து கொண்டு வரலாம். முதலாவது விண்ணப்பம் உங்களுடையதுதான். ஆகவே, உங்கள் குடும்பத்தை நீங்கள் இந்த தேசத்திற்கு அழைத்து வர நாங்கள் விசா கொடுக்கிறோம்.' என்று சொல்லி அனுமதியளித்து விட்டார்கள்!" என்று மிகுந்த ஆச்சரியமாகச் சொன்னார். அதுதான் கர்த்தர் செய்கிற அதிசயம்! காரணம், அவர் அதிசயமானவர்!

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு **நீங்கள் விசுவாசத்தோடு ஜெபிப்பீர்களானால், கட்டாயம் உங்களுடைய வாழ்க்கையிலும் அதிசயம் நடக்கும்!**

இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் என்ன தடை இருக்கிறது? உங்கள் தொழிலில் தடையா? அல்லது உங்கள் ஊழியத்தில் தடையா? அல்லது உங்கள் பிள்ளைகளுடைய காரியத்தில் தடையா? இப்படியாக, ஏதோவொரு தடை உங்களை பயமுறுத்தி, நீங்கள் முன்னேறி போக விடாதபடி செய்து கொண்டிருக்கிறதா?

**பயப்படாதிருங்கள்!** உங்கள் **தடைகள் விலகும்!** உங்களுக்கான **வழிகள் யாவும் திறக்கும்! அதிசயம் நடக்கும்!** ஏனென்றால், அந்த அதிசயத்தைச் செய்கிறவர், "... **உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.**" [மீகா 7:15] என்று வாக்குக் கொடுத்திருக்கிற, '**அதிசயமானவர்!**' என்கிற பெயரை கொண்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து!

ஆகவே, இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் அந்த **அதிசயத்தை நீங்கள் காண்பீர்கள்!**

# அதிசயமாக கசப்பு மாறும்!



"... **உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.**" மீகா 7:15.

அன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, வனாந்தரத்தின் வழியாக நடத்தப்பட்டு வந்தபோது, 3 நாட்களாக குடிக்க தண்ணீர் கிடைக்காமல் மிகுந்த தாகத்தோடு இருந்தார்கள். 3வது நாள், '**மாரா**' என்கிற இடத்தில் தண்ணீர் இருந்ததை பார்த்தார்கள். அவர்கள் அந்த தண்ணீரை குடித்தபோது, வாயில் வைக்கவே முடியாத அளவிற்கு அவ்வளவு கசப்பாக இருந்தது!

அந்த ஜனங்கள் தணியாத தாகத்தினால் மனம் வெறுத்துப் போய், **மோசே**யினிடத்தில் வந்து முறையிட்டார்கள். மோசே கர்த்தரை நோக்கி கூப்பிட்டபோது, கர்த்தர் அவருக்கு ஒரு மரத்தை காண்பித்தார். அந்த மரத்தை வெட்டி தண்ணீரில் போட்டபோது, அதிலிருந்த கசப்பு முற்றிலுமாக நீங்கி, தண்ணீர் மதுரமாக மாறியது! அந்த ஜனங்கள் திருப்தியாக குடித்து தங்கள் தாகத்தை தீர்த்துக் கொண்டு கடந்து சென்றார்கள். **(யாத். 15:22-25)**. அன்றைக்கு அந்த அதிசயத்தை செய்தவர் கர்த்தர்!

எனக்கு அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற கசப்பான சூழ்நிலைகள் யாவும் அதிசயமாக மாறும்! அந்த அதிசயத்தை கர்த்தர் உங்களுக்கு செய்வார்!

இன்றைக்கு ஒருவேளை நீங்கள், "என்ன வாழ்க்கை இது? 'என் கணவர் இப்படி இருக்கிறார்!' அல்லது, 'என் மனைவி இப்படி இருக்கிறாள்!' அல்லது, 'என் பிள்ளைகள் இப்படி இருக்கிறார்கள்!' இந்த வாழ்க்கை வாழ்வதற்குப் பதிலாக, செத்துப் போய் விட்டால் நலமாக இருக்கும்!" என்று சொல்லி, வாழ்க்கையே கசந்து போன நிலைமையில் இருக்கலாம்!

அல்லது, "எவ்வளவோ பணம் செலவழித்து சிகிச்சை செய்த போதிலும், இந்த வியாதி சுகமாகாமல் என்னை வேதனைப்படுத்திக் கொண்டே இருக்கிறது! வீட்டிற்குள் ஒரு நிம்மதியும் இல்லை! எதற்காக நான் இந்த உலகத்தில் வாழ வேண்டும்?" என்று சொல்லி, வாழ்க்கையை

குறித்த ஒரு கசப்பு உங்களுடைய உள்ளத்தில் இருக்கலாம்!

அல்லது யார் மூலமாகவோ நீங்கள் பாதிக்கப்பட்டு, "எதற்காக அவர்கள் என்னிடத்தில் பிரச்சனை பண்ணுகிறார்கள்? அவர்களால்தான் என் வாழ்க்கையே போராட்டமாக மாறி விட்டது!" என்று, யார் மீதாவது உங்கள் உள்ளத்தில் ஒரு கசப்பு உண்டாகி இருக்கலாம்!

**கலங்காதிருங்கள்!** இன்றைக்கு **உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற கசப்புகள் யாவும் மாறும்!** அந்த அதிசயத்தை கர்த்தர் உங்களுக்கு செய்யப் போகிறார்!

அன்றைக்கு மாராவின் கசப்பை மாற்றுவதற்காக கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தை காண்பித்தார். அதே கர்த்தர் இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற கசப்பை மாற்றுவதற்காக ஒரு மரத்தை காண்பித்து, "என் மக(னே)ளே, நீ அதை நோக்கிப் பார். **உன் வாழ்க்கையில் காணப்படுகிற கசப்புகள் எல்லாம் மாறும்!**" என்று சொல்கிறார்.

"அது என்ன மரம்?" என்று கேட்கிறீர்களா? அதுதான் **சிலுவை மரம்!** அது வெகு தூரத்தில் இல்லை! உங்கள் அருகில்தான் இருக்கிறது! வெறும் சிலுவையை அல்ல! அந்த சிலுவையில் தொங்குகிற இயேசு கிறிஸ்துவை நோக்கி பாருங்கள். அவரிடத்திலிருந்துதான் நீங்கள் அதிசயத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

அவருக்குள்தான் அற்புதங்கள் இருக்கிறது! அவருக்குள்தான் வல்லமை இருக்கிறது! நீங்கள் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரத்தை நோக்கி பார்க்கும்போது, உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற கசப்பான சூழ்நிலைகள் எல்லாம் மாறும்! கசந்து போயிருக்கிற உங்கள் வாழ்க்கையை மதுரமாக மாற்றி, ஆசீர்வதிக்கிற வல்லமை அந்த சிலுவை மரத்திற்கு உண்டு!

ஏனென்றால், இயேசு கிறிஸ்து அந்த சிலுவையில் தொங்கும்போதே நம்முடைய எல்லா கசப்புகளையும் ஏற்றுக் கொண்டார்! அவர் தாங்கொண்ணாத வேதனையோடு சிலுவையில் தொங்கும்போது, கசப்பு கலந்த காடியை அவருக்கு கொடுத்தார்கள். அவர் அந்த காடியை ருசி பார்த்து விட்டு, குடிக்க மனமில்லாமல், 'வேண்டாம்.' என்று ஒதுக்கி விட்டார். **(மத்தேயு 27:34)**.

எனக்கு அன்பானவர்களே, அவர் ஏன் காடியிலிருந்த அந்த கசப்பை ருசி பார்த்தார்? நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகிற கசப்பான சூழ்நிலைகளை எல்லாம் மாற்றுவதற்காகத்தான் அவர் அந்த கசப்பை ருசி பார்த்தார்! நம்மைப்போல கசப்பான பாதையில் அவரும் கடந்து போனார்!

கர்த்தருக்கு பயந்த ஒரு ஆசிரியை, மிகுந்த ஜெபத்தோடு தன் பணியை உண்மையாக செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுடைய தலைமை ஆசிரியைக்கு அவர்களை கண்டாலே பிடிக்காது. அந்த ஆசிரியை என்ன செய்தாலும், அவர்களை குற்றப்படுத்தி, எல்லோருக்கும் முன்பாக அவர்களை திட்டி, அவமானப்படுத்துவார்கள்.

அந்த தலைமை ஆசிரியை தலைமை பொறுப்பில் இருந்தபடியினால் அவர்களை எதிர்த்து எதுவும் பேசவும் முடியாது. எவ்வளவோ பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அந்த ஆசிரியை மனம் கசந்து போய், "எதற்கு நான் இந்த உலகத்தில் வாழ வேண்டும்? எதற்காக நான் இப்படி கஷ்டப்பட வேண்டும்?" என்று சொல்லி, மனம் வெறுத்துப் போய் விட்டார்கள்.

ஒரு நாள் இரவு அவர்கள் தன்னுடைய கணவரையும், பிள்ளைகளையும் சாப்பிட வைத்து விட்டு, அவர்களை படுக்கைக்கு அனுப்பி விட்டார்கள். ஆனால், அவர்களால் தூங்க முடியவில்லை. அன்று இரவு அவர்கள் எதுவும் சாப்பிடாமல், தேவ சமூகத்தில் அமர்ந்து மிகுந்த கண்ணீரோடு, "என்ன ஆண்டவரே? ஏன் என் வாழ்க்கையில் இப்படி நடக்கிறது? ஏன் என்னை இப்படியெல்லாம் அவமானப்படுத்தி, கொடுமைப்படுத்துகிறார்கள்? இப்படியேதான் நான் வாழ வேண்டுமா? இந்த வாழ்க்கையை நான் வாழ்வதை விட மரித்துப் போனால்

நன்றாக இருக்குமே?" என்று சொல்லி, நடு இராத்திரி வரை அழுது கொண்டே இருந்தார்கள். அந்த அளவிற்கு அவர்களுடைய உள்ளம் மிகவும் காயப்பட்டு, வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது.

அந்த சமயத்தில், கண்ணீர் நிறைந்த அவர்களுடைய கண்களுக்கு முன்பாக, இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிற ஒரு காட்சியை அவர்கள் தரிசனத்தில் பார்த்தார்கள்.

அந்த சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசு கிறிஸ்து அந்த ஆசிரியையை பார்த்து, "மகளே, நீ ஏன் அழுது கொண்டிருக்கிறாய்? உன்னுடைய நிந்தைகளையும், அவமானங்களையும், பாடுகளையும், கசப்புகளையும் நான் சிலுவையில் சுமந்தேனே!

என் மீது அபாண்டமான பழியை சுமத்தினார்கள்! என்னை கேவலப்படுத்தினார்கள்! நன்மை செய்த எனக்கு தீமைகளைத்தான் செய்தார்கள்! எனக்காக பரிந்து பேச அன்றைக்கு யாருமே வரவில்லையே! எல்லோரும் பயந்து ஒதுங்கி விட்டார்கள்! அவ்வளவு நிந்தைகளுக்கு மத்தியிலும், அவமானத்திற்கு மத்தியிலும், பொய் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியிலும், உனக்காகத்தானே நான் சிலுவையில் தொங்கி மரித்தேன்?

ஆகவே, உன் மன வேதனைகள் எல்லாம் எனக்கு நன்றாகவே தெரியும்! நீ அழாதே! உனக்கு நான் இருக்கிறேன்! ஆகவே, நீ எதற்கும் பயப்படாதே!" என்று சொல்லி அவர்களை ஆறுதல்படுத்தி, அவர்களுடைய உள்ளத்திலிருந்த காயத்தை ஆற்றினார்.

இயேசு கிறிஸ்து பேசிய அந்த வார்த்தைகளின் நிமித்தம், அவர்களுடைய உள்ளத்திலிருந்த கசப்புகள் எல்லாம் மாறியது. தன்னை கொடுமைப்படுத்திய அந்த தலைமை ஆசிரியையை நேசிக்கிற, மன்னிக்கிற, ஆசீர்வதிக்கிற ஒரு புது இருதயம் அவர்களுக்கு உண்டானது.



அந்த ஆசிரியை ஒருமுறை என்னை சந்தித்து ஜெபிக்க வந்திருந்தபோது, "பிரதர், அன்றைக்கு அந்த சிலுவை காட்சியை கர்த்தர் எனக்கு காண்பித்து, என்னோடு பேசாமல் இருந்திருந்தால், நான் என்றைக்கோ செத்துப் போயிருப்பேன்! வாழ்க்கையே வெறுத்துப் போயிருந்த என்னுடைய கசப்பான சூழ்நிலையை கர்த்தர் மாற்றி, என்னை ஆசீர்வதித்தார்!" என்று சந்தோஷமாக சொன்னார்கள்! அதுதான் அதிசயம்!

ஒருவேளை இன்றைக்கு, உங்களுடைய வாழ்க்கை கசந்து போன ஒரு நிலைமையில் இருக்கிறதா? "ஆண்டவரே, இதற்கு மேல் என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை! ஆகவே, என்னை எடுத்துக் கொள்ளும்!" என்று சொல்லி ஜெபிக்கிற ஒரு நிலைமைக்கு நீங்கள் வந்து விட்டீர்களா?

அல்லது பொல்லாத மனிதர்களாகிய பொறாமை கொண்ட மக்கள் மீதான கசப்புகள் உங்களுடைய வாழ்க்கையை பாதித்துக் கொண்டு இருக்கிறதா?

எனக்கு அன்பானவர்களே, எதை குறித்தும் **நீங்கள் கலங்கவோ, பயப்படவோ வேண்டிய அவசியமே இல்லை!** நமக்காக கசப்பை ருசி பார்த்த இயேசு கிறிஸ்துவை மட்டும் நினைத்துக் கொள்ளுங்கள். **அவர் கட்டாயமாக உங்களுடைய கசப்புகளை எல்லாம் நீக்கி, மதுரமாக மாற்றுவார்!**

உங்களுடைய கசப்பான எல்லா சூழ்நிலைகளும் மாறி, மிகவும் அதிசயமாக ஒரு மதுரமான சூழ்நிலை உங்களுக்கு உண்டாகும்! **அதிசயமான இயேசு கிறிஸ்து, அந்த அதிசயத்தை உங்களுக்கு கட்டாயமாக செய்வார்!**

# அதிசயமாக தேவைகள் சந்திக்கப்படும்!



**"... உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்."** மீகா 7:15.

எகிப்திலிருந்து வெளியே வந்த இஸ்ரவேல் ஜனங்கள், கானான் தேசத்திற்கு போய் சேர 40 வருடங்கள் ஆனது! அது சில நாட்கள் பிரயாண தூரம்தான்! ஆனால் அந்த ஜனங்கள் முறுமுறுத்துக் கொண்டு, கீழ்படியாதவர்களாக, கர்த்தருக்கு விரோதமாக அனேக பாவங்களை செய்து அவரை துக்கப்படுத்தியதினால், அவர்களை கர்த்தர் வனாந்தர வழியாக 40 வருடங்கள் நடந்து போகப் பண்ணினார்!

அந்த 40 வருடங்களும் சாப்பிடுவதற்கு அவர்கள் என்ன செய்தார்கள்? தண்ணீர் குடிப்பதற்கு என்ன செய்தார்கள்? உடைக்கு என்ன செய்தார்கள்? ஏனென்றால், அந்த வனாந்தரத்தில் விதைக்கவோ, அறுக்கவோ வயல் நிலங்கள் கிடையாது! ஒரு ஆறோ, குளமோ எதுவும் கிடையாது! ஒரு மரமோ, செடியோ எதுவுமே கிடையாது!

பகலில் வெயிலின் கொடூரம் பயங்கரமாக இருக்கும்! இரவானால் நடுங்கப் பண்ணுகிற குளிர்தான் இருக்கும்! அப்படிப்பட்ட ஒரு வனாந்தரத்தின் வழியாகத்தான் கர்த்தர் அவர்களை நடத்திக் கொண்டு போனார்.

ஏராளமான சிறு பிள்ளைகள் இருந்தார்கள்! யாராவது வியாதிப்பட்டு விட்டால், என்ன செய்திருப்பார்கள்? அவர்களுக்கு அவ்வளவு தேவைகளும், பிரச்சனைகளும் இருந்தது. அவைகளுக்கு மத்தியில்தான் ஒரு குறைவும் இல்லாமல், அதிசயமாக அவர்களுடைய தேவைகளை எல்லாம் கர்த்தர் சந்தித்தார்!

அவர்கள் காலையில் சாப்பிடுவதற்கு தேவ தூதர்களுடைய உணவான, '**மன்னா**'வை கொடுத்தார்! மாலையில் சாப்பிடுவதற்கு, 'காடை' இறைச்சியை கொடுத்தார்! **(யாத். 16:8)**. காலையில் சைவம்! மாலையில் அசைவம்!

கர்த்தர் அவர்களை எப்படி போஷித்து நடத்தினார் என்று பார்த்தீர்களா? அவர்கள் கானான் தேசத்திற்கு போய் சேரும் வரைக்கும் அப்படியாக அவர்களுக்கு போஜனம் கொடுக்கப்பட்டது.

சரி! அடுத்தபடியாக அந்த 30 லட்சம் ஜனங்களும் குடிப்பதற்கும், குளிப்பதற்கும், வாழ்க்கையின் மிகவும் அத்தியாவசியத் தேவையான தண்ணீருக்கு என்ன செய்திருப்பார்கள்? என்று பார்ப்போமானால், கர்த்தர் அவர்களுக்காக கன்மலையிலிருந்து தண்ணீரை வரப் பண்ணினார்! பாறையிலிருந்து ஆற்றைப்போல தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி வந்திருக்கும்! கர்த்தர் எவ்வளவு பெரிய அதிசயத்தை செய்திருக்கிறார் என்று பாருங்கள்! இப்படியாக, கர்த்தர் அவர்களுடைய தேவைகளை எல்லாம் அதிசயமாக சந்தித்துக் கொடுத்தார்.

காரணம், கர்த்தருடைய கரம் அதிசயங்களைச் செய்யும்! ஏனென்றால், அவர் அதிசயமானவர்! அவர் நம்முடைய தேவைகளை எல்லாம் அதிசயமாக சந்தித்துக் கொடுக்கிற கர்த்தராக இருக்கிறார்.

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கையில் என்ன தேவை இருக்கிறது? கடன் பிரச்சனைக்கென்று, அல்லது பிள்ளைகளின் படிப்பின் காரியத்திற்கென்று, அல்லது மருத்துவச் செலவுக்கென்று, அல்லது உங்கள் பிள்ளைகளின் திருமணக் காரியத்திற்கென்று எத்தனையோ தேவைகள் இருக்கலாம்!

அதனால், என்ன செய்வதென்று தெரியாமல் இன்றைக்கு கலங்கிப்

போயிருக்கிறீர்களா? **கலங்காதிருங்கள்!** ஏனென்றால் கர்த்தர் இன்றைக்கு, "... **உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்**." [மீகா 7:15] என்று உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறார்.

**உங்கள் தேவைகள் எல்லாம் அதிசயமாக சந்திக்கப்படும்!** நீங்கள் அதிசயத்தை காண்பீர்கள்! அதிசயமாக உங்களுடைய தேவைகளை எல்லாம் சந்தித்து, அற்புதமாக உங்களை நடத்துகிற கர்த்தர் உங்களுக்கு இருக்கும்போது, எதற்காக நீங்கள் பயப்பட வேண்டும்? எனவே, **எந்தக் காரியத்தை குறித்தும் நீங்கள் பயப்படாதீர்கள்!**

உங்கள் வாழ்க்கையில் அனுதினமும் அதிசயம் நடக்கும்! எங்கிருந்து உதவி வரும்? அது எப்படி வரும்? என்று தெரியாது. ஆனால், உங்களுக்கு உதவி வரும்! உங்களுடைய அனுதின தேவைகளான உணவு, தண்ணீர், உடை உட்பட, உங்களுக்கு தேவையான மற்ற எல்லா தேவைகளையும் கர்த்தர் அதிசயமாக சந்தித்துக் கொடுத்து, உங்களை ஒரு குறைவுமில்லாமல் நடத்திச் செல்வார்!

உங்கள் தேவைகளை எல்லாம் அதிசயமாக சந்தித்துக் கொடுக்கிற கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவை மட்டும் நீங்கள் சார்ந்து கொள்ளுங்கள். அவரை மட்டும் நீங்கள் விசுவாசித்தால் போதும்!**

சுமார் 50 வருடங்களுக்கு முன்பு, 1974ம் வருடம் கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அழைத்தபோது, நான் அவரிடத்தில், "ஆண்டவரே, நான் ஊழியத்திற்கு வந்து விடுகிறேன். இதுவரை என்னை என் பெற்றோர் கவனித்தார்கள். அதனால் எனக்கு எந்தக் குறையும் இல்லை.

நான் உம்முடைய ஊழியத்தைச் செய்ய வந்த பிறகு, இனிமேல் என் பெற்றோரிடத்தில் நான் எதையும் கேட்க மாட்டேன். நீங்கள்தான் எனக்கு முழுப் பொறுப்பு. இனி எனக்கு எல்லாமே நீங்கள்தான்!" என்று சொன்னேன். அப்போது கர்த்தர் என்னிடத்தில், "என் மகனே, நீ என்னை நம்பி, பின்பற்றி வா! நான் உன் தேவைகளை எல்லாம் சந்திப்பேன்! நாளைய தினத்தை குறித்து நீ கவலைப்படாதே! அனுதினமும் உனக்கு என்னென்ன தேவையோ, அவைகளை எல்லாம் நான் உனக்கு சந்தித்துக் கொடுப்பேன்!" என்று உறுதியாக எனக்கு வாக்குக் கொடுத்தார்.

எனக்கு அன்பானவர்களே, என்னுடைய இந்த 50 வருட கால ஊழியப் பாதையில் கர்த்தர் என்னை பட்டினியாக இருக்க விட்டதில்லை! ஊழியத்தின் நிமித்தமாக உபவாசப் பாதையில் என்னை நடத்துகிறார், அது வேறு! சில சமயங்களில் சூழ்நிலையின் நிமித்தமாக, பட்டினியின் பாதையில் என்னை அவர் நடத்தியிருப்பது உண்மைதான்! ஆனால், "என்னால் உன்னை போஷித்து காப்பாற்ற முடியாது." என்று, ஒருபோதும் கர்த்தர் சொன்னதில்லை.

வாக்குக் கொடுத்த கர்த்தர் மிகவும் அதிசயமாக என் தேவைகளை எல்லாம் சந்தித்து வருகிறார். எல்லாவற்றுக்கும் எனக்கு அவர்தான்! நான் அவரை மட்டுமே சார்ந்து கொள்ளப் பழகினேன். அதனால் இந்நாள் வரை அவர் எனக்கு ஒரு குறையும் வைக்கவில்லை! என்னுடைய இந்த 50 வருட ஊழியப் பாதையில் இம்மட்டும் கர்த்தர் என்னை போஷிக்கிறார்! உடுத்துவிக்கிறார்! என்னுடைய எல்லா தேவைகளையும் கர்த்தர் எனக்கு அதிசயமாக சந்தித்துக் கொடுத்து, என்னை அழகாக வழி நடத்தி வருகிறார்.

> இயேசு கிறிஸ்துவை மட்டும் நீங்கள் சார்ந்து கொள்ளுங்கள். அவரை மட்டும் நீங்கள் விசுவாசித்தால் போதும்!

என் தேவைகளை எல்லாம் அதிசயமாக சந்தித்து, என்னை வழி நடத்தி வருகிற கர்த்தர், இன்றைக்கு உங்கள் கடன் பிரச்சனையை சந்திப்பார்! உங்கள் குடும்பத்தின் தேவைகளை எல்லாம் சந்திப்பார்!

'கிறிஸ்துமஸை ஆடம்பராக கொண்டாட வேண்டும்!" என்று எண்ணி, **கடன் வாங்கி**

கொண்டாடாதீர்கள். **கர்த்தரை மட்டுமே விசுவாசியுங்கள்! அவரை மட்டுமே சார்ந்து கொள்ளுங்கள்.** அவரை நீங்கள் விசுவாசிப்பீர்களானால், ஒரு குறைவுமில்லாமல் ஆசீர்வதித்து, அதிசயமாக உங்களை நடத்துவதை நீங்கள் காண்பீர்கள்.

**"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாங் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்."** (பிலிப்பியர் 4:19) என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

ஆகவே, இன்றைக்கு உங்களுக்கு என்ன தேவையோ விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் ஜெபித்துக் கேளுங்கள். கர்த்தர் உங்கள் தேவைகளை எல்லாம் அதிசயமாக சந்தித்துக் கொடுத்து, எந்தக் குறைவுமில்லாமல் உங்களை அற்புதமாக நடத்துவார். காரணம், **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதிசயமானவர்!** அவர் உங்கள் வாழ்க்கையில் அதிசயங்களை காணப் பண்ணுவார்!

விசுவாசத்தோடு இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்:



நல்ல தகப்பனே, "... **உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்."** (மீகா 7:15) என்று நீர் எனக்கு கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்திற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

நீர் அதிசயமானவர்! அதிசயமான காரியங்களை எனக்கு செய்வீர் என்று நான் உம்மை விசுவாசிக்கிறேன்! என் வாழ்க்கையில் காணப்படுகிற தடைகளை எல்லாம் நீக்கி, எனக்கான வழிகளை அதிசயமாக திறந்து கொடுப்பீராக!

என் உள்ளத்தில் காணப்படுகிற கசப்புகளை எல்லாம் நீக்கி, என்னை சந்தோஷமாக வாழப் பண்ணுவீராக!

என்னுடைய தேவைகளை எல்லாம் நீர் அதிசயமாக சந்தித்து, குறைவுகளை எல்லாம் நிறைவாக்கி, என்னையும், என் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பீராக!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்! ஆமென்!

## சென்னை–அண்ணா சாலையில் 'ஆசீர்வாதமான சென்னை!'

# ஜெப மையம்!

இந்த ஜெப மையமானது, கடைசிக் கால எழுப்புதலுக்காக ஜெபிக்கவும், சென்னை பட்டணத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கவும் கர்த்தரால் ஆரம்பிக்கப்பட்டு, கீழ்காணும் முகவரியில் செயல்பட்டு வருகிறது.

BLESSED CHENNAI PRAYER CENTRE,
7 th FLOOR, B WING, NO. 96, PRINCE KUSHAL TOWERS,
NEXT TO LIC METRO STATION, ANNA SALAI,
CHENNAI - 600 002.

| | |
|---|---|
| மாதந்தோறும் 2வது வெள்ளி<br>**எழுப்புதல் முழு இரவு ஜெபம்!** | இரவு 10:00 – அதிகாலை 4:00. |
| மாதந்தோறும் 3வது சனி<br>**எழுப்புதல் உபவாச ஜெபம்!** | காலை 10:00 – மதியம் 2:00. |

- நீங்கள் ஜெபிப்பதற்கு வசதியாக இங்கு ஜெபக் குறிப்புகள் வைக்கப்பட்டுள்ள ஜெப அறைகள் உள்ளன.
- மாதம் ஒருமுறை, காவல் துறையினர், I.T., துறையினர், தலைமை செயலக ஊழியர்கள், மருத்துவத் துறையினர், சினிமாத் துறையினர் குழுவாக வந்து ஜெபிக்கிறார்கள். நீங்களும் உங்கள் துறை சார்ந்தவர்களோடு குழுவாக வந்து ஜெபிக்கலாம்.
- மட்டுமல்ல, வாலிபர்கள், பெண்கள், தேவ ஊழியர்கள் குழுவாக வந்து ஜெபிக்கிறார்கள். நீங்களும் குழுவாக வந்து ஜெபிக்கலாம்.
- உங்கள் பிரச்சனைகளுக்கு ஆலோசனைகள் வழங்கி, ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகிறது. ஜெபிக்க வாருங்கள், கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.
- இன்னும் பல விதமான ஜெபங்கள் இங்கு நடைபெறுகிறது. அதன் விபரங்களை நேரிலோ, அல்லது **96777 32515** என்கிற இந்த அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டோ நீங்கள் அறிந்து கொள்ளலாம். – **உங்கள் சகோதரன்.**

"…. தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்;…"

மத்தேயு 19:21.

# பண்டிகை நாட்களில்… ஏழை-எளியோரை நினைத்துக் கொள்ளுங்கள்!



## நற்கிரியைகள் மூலமாக கிறிஸ்துவின் அன்பு!

ஒவ்வொரு வருடமும் **கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில்**, நமது **இயேசு விடுவிக்கிறார் – புது வாழ்வு சங்கம்** மூலமாக, நலிவுற்ற **ஏழை–எளிய மக்களுக்கு புத்தாடைகள், மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள்** வழங்கி, அதோடு கூட **கிறிஸ்துமஸ் வெகுமதி**யும், **ஐக்கிய விருந்து**ம் கொடுத்து அவர்களை மகிழ்வித்து, **கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி**யையும் அறிவித்து வருகிறோம்.



**இந்த 2025ம் வருடத்திலும்…** கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தி, அதன் மூலமாக சுமார் **20,000**க்கும் அதிகமான நலிவுற்ற, ஆதரவற்ற ஏழை–எளிய மக்களுக்கு கிறிஸ்து பிறப்பின் **நற்செய்தியை அறிவித்து**, அவர்களுக்கு **புத்தாடைகள்**, **செயற்கை உபகரணங்கள்** மற்றும் கிறிஸ்துமஸ் **சிறப்பு விருந்து** கொடுத்து மகிழ்விக்க இருக்கிறோம்.

குறிப்பாக, **சென்னை, மதுரை, திருச்சி** ஆகிய மாநகரங்களில் தெருவோரங்களில் வசிக்கிற சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட ஏழை–எளிய குடும்பங்களுக்கு **கிறிஸ்துமஸ் பரிசுகள்** வழங்குவது மட்டுமல்லாமல், இந்தியாவின் சில மாநிலங்களிலும், தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், **இலங்கை தேசத்திலும்** செயல்பட்டு வருகிற நமது குட் சமாரிட்டன் கிளப்புகள் மூலமாக ஏராளமான கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளை நடத்தி, **உதவிகள் செய்ய** கர்த்தருக்குள் தீர்மானித்திருக்கிறோம்.

**கிறிஸ்துமஸ் பண்டிகையின் பயனாளிகள்!**

| | | | |
|---|---|---|---|
| | | மாற்றுத் திறனாளிகள் | தொழு நோயாளிகள் |
| முதியவர்கள் | தெருவோர வாழ் மக்கள் | திருநங்கையர்கள் | ஆதரவற்றவர்கள் |
| விதவைகள் | ஏழை-எளிய சிறு பிள்ளைகள் | தர்மம் எடுப்பவர்கள் | நரிக் குறவர்கள் |

பிரியமானவர்களே, நீங்களும் எங்களோடு இணைந்து, ஏழை–எளிய மக்கள் மத்தியில் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக **ஜெபியுங்கள்!** ஏவப்படுகிறவர்கள் **கொடுத்துத் தாங்குங்கள்! பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்!** – உங்கள் சகோதரன்.

பயன் பெறுவோர் சுமார் **20,000** பேர்.

ஒரு பயனாளிக்கு கிறிஸ்துமஸ் பரிசு **₹1,000/-**

கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிறபடி, ஒரு நபருக்கோ, அல்லது அதற்கு மேலோ கொடுத்து தாங்கலாம்!

**SCAN & PAY**
Name: NEW LIFE SOCIETY TRUST
Upi Id: NEWLIFESOC@SBI
UPI

GPay: 70947 77781

Online Donations: www.newlifesociety.in

உங்களது நன்கொடைகளை **மணியார்டர் (M.O.)** மூலமாகவோ, அல்லது 'New Life Society' என்கிற பெயரில் **Cheque / DD** மூலமாகவோ அனுப்பலாம்.

**உங்கள் நன்கொடைகளை அனுப்ப…**

Bank Details

| | |
|---|---|
| A/C Name | New Life Society |
| Bank Name | Tamilnad Mercantile Bank Ltd., |
| A/C No | 054 1007 1040 0513 |
| Branch | Prahasapuram, Nazareth |
| Branch Code | 000054 |
| IFS Code | TMBL 0000054 |

உங்கள் நன்கொடைகளுக்கு (இந்திய குடிமக்களுக்கு மட்டும்) 80G-யின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

NEW LIFE SOCIETY, Nalumavadi-628211, Thoothukudi Dt., T.N., India.
E-Mail: accounts@newlifesociety.in

Foreign Contributions: +91 890 383 5315 | விபரங்களுக்கு: +91 890 383 5315, +91 98427 35305.



வெளி நாட்டுச் செய்திகள்!

# வேதாகம தேசங்களில் எழுப்புதல் ஜெப சுற்றுலா 2025



"...**இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்**." [ரோமர் 11:26] என்று வாக்குப் பண்ணி இருக்கிற தேவனாகிய கர்த்தர், "அதற்காக ஜெபிக்க, திரள் கூட்ட மக்களை எழுப்ப வேண்டும்." என்று கட்டளையிட்டார்.

கர்த்தருடைய இந்த கட்டளையை நிறைவேற்றும் விதமாக, கடந்த 2016ம் ஆண்டுமுதல், வருடந்தோறும் **இஸ்ரேல் எழுப்புதல் ஜெப சுற்றுலா** ஒழுங்கு செய்யப்பட்டு, ஜெபிக்கிற தேவ பிள்ளைகளை ஒருங்கிணைத்து, அவர்களை வேதாகம தேசங்களுக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள வேதாகம இடங்களை சுற்றிக் காண்பித்து வருவதோடு, அந்த தேசத்தில் கர்த்தருடைய எழுப்புதல் தரிசனத்தையும் விதைத்து வருகிறோம்.

அதன்படி இந்த வருடத்திலும், கடந்த (2025) செப்., 8 முதல், 18ம் தேதிவரை, [10 நாட்கள்] **இஸ்ரேல் எழுப்புதல் ஜெப சுற்றுலா** ஒழுங்கு செய்யப்பட்டு, **இந்தியா** உட்பட, **சிங்கப்பூர்**, **அமெரிக்கா**, **இங்கிலாந்து**, **தென் ஆப்பிரிக்கா** ஆகிய தேசங்களை சார்ந்த 168 தேவ பிள்ளைகளை அழைத்துச் சென்று, வேதாகம தேசங்களாகிய **ஜோர்டான்**, **இஸ்ரேல்**,



12 மணி நேர உபவாச ஜெபம்

ஜோர்டான்


சவக் கடல்


நேபோ பர்வதம்

**பாலஸ்தீனம்** மற்றும் **எகிப்து** ஆகிய தேசங்களை சுற்றிப் பார்க்கவும், அந்தந்த தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். தங்குவதற்கு நட்சத்திர தரமுள்ள ஹோட்டல்களும், பிரயாணம் செய்ய குளிர் சாதன வசதி கொண்ட 4 பேருந்துகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் இந்த ஜெப சுற்றுலாவின் எல்லா நாட்களும் அந்தந்த இடங்களில் நடைபெற்ற வேதாகம சம்பவங்களை விளக்கிச் சொன்னது மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. முதலில் **ஜோர்டான்** தேசத்திலுள்ள சில இடங்களை பார்வையிட்ட பிறகு, இஸ்ரேல் தேசத்தில் இயேசு கிறிஸ்து சுற்றித் திரிந்து ஜனங்களுக்கு அற்புதம் செய்த அனேக இடங்களை பார்வையிட்டோம்.

இஸ்ரேல்


கலிலேயா கடலில் இஸ்ரேல் தேசத்திற்காக சிறப்பு ஜெபம்

**கர்மேல் பர்வதத்தில்** எலியா தேவ அக்கினியை இறக்கிய இடத்தில் ஒரு **விசேஷித்த ஜெபம்** ஏறெடுக்கப்பட்டது. **கலிலேயா கடலில்** பிரயாணம் செய்து, நடுக் கடலில் படகுகளை நிறுத்தி,


இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த இடத்தில் திருவிருந்து ஆராதனை



கெத்செமனே தோட்டத்தில் சிறப்பு ஜெபம்

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் இந்த ஜெப சுற்றுலாவின் எல்லா நாட்களும் அந்தந்த இடங்களில் நடைபெற்ற வேதாகம சம்பவங்களை விளக்கிச் சொன்னது மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. முதலில் **ஜோர்டான்** தேசத்திலுள்ள சில இடங்களை பார்வையிட்ட பிறகு, இஸ்ரேல் தேசத்தில் இயேசு கிறிஸ்து சுற்றித் திரிந்து ஜனங்களுக்கு அற்புதம் செய்த அனேக இடங்களை பார்வையிட்டோம்.

**கர்மேல் பர்வதத்தில்** எலியா தேவ அக்கினியை இறக்கிய இடத்தில் ஒரு **விசேஷித்த ஜெபம்** ஏறெடுக்கப்பட்டது. **கலிலேயா கடலில்** பிரயாணம் செய்து, நடுக் கடலில் படகுகளை நிறுத்தி, இஸ்ரேல் தேசத்திற்காக **சிறப்பு ஜெபம்** ஏறெடுக்கப்பட்டது.



சகோ. சாம் ஜெபராஜ்



முற்பிதாக்களின் கல்லறைகள் – எபிரோன்

**கெத்செமனே தோட்டத்தில்** ஒரு **சிறப்பு ஜெபமும்**, இயேசு கிறிஸ்து **உயிர்த்தெழுந்த இடத்தில் திருவிருந்து ஆராதனை**யும் நடைபெற்றது.

செப்., 13ம் தேதியன்று **எருசலேம்** பட்டணத்தில், **12 மணி நேர உபவாச ஜெபம்** நடைபெற்றது. இதில், இஸ்ரேல் தேசத்தின் சரித்திரத்தை நமது சகோதரர் அவர்கள் விளக்கிச் சொல்லி, அந்த தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபத்தை ஏறெடுத்தபோது, அனைவரும் மிகுந்த பாரத்தோடு ஜெபித்தார்கள்.



கர்மேல் பர்வதத்தில் விசேஷித்த ஜெபம்


புலம்பலின் சுவர்


மேலறை


காய்பாவின் வீடு


தேவாலயம் இருந்த இடம்


இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற இடம்


பெதஸ்தா குளம்


சிதேக்கியா குகை

அந்த சமயத்தில் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்ற அனேகர் சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

பின்பு **பாலஸ்தீனா** தேசத்தில் இருக்கிற **பெத்லகேமில் இயேசு கிறிஸ்து பிறந்த இடம்**, **மேய்ப்பர்கள் தங்கியிருந்த வயல் வெளி**, **போவாஸின் களம்** ஆகியவற்றை பார்வையிட்டு, **எபிரோன்** பகுதியில் **முற்பிதாக்களின் கல்லறைகள்** இருக்கிற இடங்களையும் பார்வையிட்டு விட்டு, **எகிப்து** தேசத்திற்கு பிரயாணப்பட்டபோது, அந்த வனாந்திரப் பயண அனுபவம் மிகச் சிறப்பாக இருந்தது.

மட்டுமல்ல, **சீனாய் மலை**, **ஏலிம்**, **மாரா** போன்ற இடங்களையும், **எகிப்திய பிரமிடுகள்**, **இயேசு கிறிஸ்து குழந்தையாக இருந்தபோது வசித்த வீடு** ஆகிய இடங்களை பார்வையிடவும், **நைல் நதியில் பிரயாணம்** செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார்.

இந்த ஜெப சுற்றுலாவில் கலந்து கொண்ட அனைவரும் இஸ்ரேல் தேசத்தின் எழுப்புதலுக்காக தொடர்ந்து ஜெபிக்கவும், அதற்கென்று பிரயாசப்படவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

## பாலஸ்தீனம்



சோதனை மலை



பெத்லகேமில் இயேசு கிறிஸ்து பிறந்த இடத்திலுள்ள ஆலயம்



எகிப்து

சீனாய் வனாந்தரம்



இயேசு கிறிஸ்து வாழ்ந்த வீடு

கடைசியாக கர்த்தருக்கு நன்றி பலிகளை செலுத்திய பிறகு, அவரவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு சுக பத்திரமாக போய் சேர கர்த்தர் மாபெரும் கிருபை செய்தார்.

மட்டுமல்ல, வருகிற 2026ம் வருடம் **மே** மாதத்தில் அடுத்த **இஸ்ரேல் எழுப்புதல் ஜெப சுற்றுலா ஒழுங்கு செயப்பட்டுள்ளது**. அதில் நீங்கள் கலந்து கொள்ள விரும்பினால், **93441 81949** என்ற இந்த அலைபேசி எண்ணில் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.

நாம் **இணைந்து செயல்படுவோம்!** இஸ்ரேல் தேசத்தின் **எழுப்புதலை காண்போம்!** – ஒருங்கிணைப்பாளர்.



முட்செடி



பிரமிடுகள்

# 12 மணி நேர உபவாச ஜெபத்தில் இயேசு கிறிஸ்து எழுப்பிய அனேக சாட்சிகளில் சில...

## [10 வருட] வலி நீங்கி, சுகம்!



சுமார் **10 வருடங்களாக** என் இடுப்புப் பகுதியிலிருந்து முழங்கால்கள் வரை இருந்த ஒரு **வலி**யினால் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் எண்ணெய் பூசி ஜெபித்தபோது, அந்த **வலி முற்றிலுமாக சுகமாயிற்று. – சீனிமாலை.**

## அபிஷேகித்து, தரிசனங்களை தந்தார்!

அபிஷேகத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாத நிலைமையில், அதற்காக நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஆவியானவர் என் உள்ளத்தில், "இன்றைக்கு நான் உன்னை அபிஷேகம் பண்ணுவேன்." என்று சொல்லி, என்னை **அளவில்லாமல் அபிஷேகித்தார்**. அந்த சமயத்தில் கர்த்தர் எனக்கு சில **தரிசனங்களையும் காண்பித்தார். – டேனியல்.**



## [20 வருட] ஊறல் சுகமானது!

என் சரீரத்திலிருந்த **தாங்கவே முடியாத ஊறல் பிரச்சனை**யினால், சுமார் **20 வருடங்களுக்கும் மேலாக** கஷ்டப்பட்டேன். மருந்து-மாத்திரைகளினால் சுகம் கிடைக்கவில்லை. இதே போன்ற **ஊறல் பிரச்சனை** என் **பெற்றோருக்கும் இருந்தது**. ஜெப வேளையில், இந்த சாபக் கட்டிலிருந்து விடுதலை வேண்டி ஜெபித்தேன். நமது சகோதரர் அவர்கள் எனக்கு எண்ணெய் பூசி ஜெபித்தபோது, **ஊறல் பிரச்சனை** முற்றிலுமாக **மாறி**, **பூரண சுகத்தை** பெற்றுக் கொண்டேன். **– ஜெனா சுப்பிரமணி.**



## வேதனை நீங்கி, விடுதலை!

கால் **மூட்டு வலி**யினால், ஒரு 5 நிமிடம் கூட **நிற்கவோ**, **முழங்கால்படியிடவோ முடியாமல்**, 6 மாதங்களாக கஷ்டப்பட்டேன். மட்டுமல்ல, பல விதமான **பிரச்சனைகளினாலும்**, **போராட்டங்களினாலும்** மிகுந்த **மனக் குழப்பத்திற்குள்ளாகி**, அதை நினைத்து அடிக்கடி நான் **அழுவேன்**. ஜெப வேளையில் தேவ வல்லமை என்னை தொட்டு, எல்லா **பிரச்சனை**களையும் **நீக்கி**, பூரண **சுகத்தை** எனக்கு கொடுத்தது. **– ஜெயலட்சுமி.**



## [54 வருட] குருட்டுக் கண்ணை திறந்தார்!

சிறு வயதில் எதிர்பாராத விதமாக நான் கீழே விழுந்தபோது, ஒரு **கண்** முற்றிலுமாக **பார்வையை இழந்து** போயிற்று. ஜெப வேளையில், மிகுந்த கண்ணீரோடு அந்தக் கண்ணில் பார்வை வரும்படியாக ஜெபித்தேன். அப்போது கர்த்தர், **54 வருட**ங்களாக **குருடாக இருந்த கண்ணில் தெளிவான பார்வை**யை தந்தார்! **– விஜயலட்சுமி**.



## பின்மாற்றத்திலிருந்து விடுதலை!

சில பாவப் பழக்கங்களினால் **ஆவிக்குரிய வாழ்க்கையில்** நான் சற்று **பின்வாங்கி**ப் போயிருந்தேன். ஜெப வேளையில் மிகுந்த கண்ணீரோடு பாவ மன்னிப்பிற்காக நான் ஜெபித்தபோது, ஒரு தேவ கரம் என்னை தொட்டதை உணர்ந்தேன். அப்போது கர்த்தர் என் பாவத்தை மன்னித்து, **பாவ மன்னிப்பின் நிச்சயத்தை** எனக்கு **கொடுத்தார். – ராசாத்தி**.



## புகைப் பழக்கத்திலிருந்து விடுதலை!

**சிறு வயதிலிருந்தே** நான் **புகைப் பழக்கத்திற்கு அடிமை**யாக இருந்தபடியினால், என் **இருதயம் பாதிக்கப்பட்டு**ப் போயிற்று. ஜெப வேளையில் தேசத்திற்காக ஜெபிக்க என்னை அர்ப்பணித்து, என் விடுதலைக்காக மிகுந்த கண்ணீரோடு ஜெபித்தபோது, ஒரு தேவ வல்லமை என் மீது இறங்கியது. அப்பொழுது எனக்குள்ளிருந்து ஒரு **ஆவி வெளியேறி**ப் போனது. அந்நேரமே **புகைப் பழக்கத்திலிருந்து விடுதலை**யையும் பெற்றுக் கொண்டேன். **– சுப்பிரமணி**, பெங்களூரு.



# செய்திகள்!



## ஆட்டிப் படைக்கும் இணைய தள அடிமை நோய்!

"இன்றைக்கு **இணைய தளத்தின் வளர்ச்சி** உச்சம் தொட்டு வருகிறது! இந்த வளர்ச்சி, மனுக் குலத்திற்கு பல நன்மைகளை கொடுத்தாலும், **அனேக தீங்குகளுக்கும் வழி வகுக்கிறது** என்பதில் மாற்றுக் கருத்தில்லை!

10முதல், 13 வயது வரையுள்ள மாணவர்களில் 51% பேர் சமூக வலைத் தளத்தை பயன்படுத்துகின்றனர். இளைய தலைமுறையினர் **மாதத்திற்கு 3,400 முறை** சமூக வலைத் தளத்தை பயன்படுத்துகின்றனர். அதிலும், 25% பேர்கள் **பொய்யான சமூக வலைத் தள கணக்கை உருவாக்கி** இருக்கின்றனர்.

13% பதின்பருவ வயதினர், ஆபாச வீடியோக்களை பார்த்தும், அதனை பகிர்ந்தும் வருகின்றனர். 7முதல், 8 வயது வரையுள்ள **பிள்ளைகள் அதிக நேரம்** செல்போனில் **Games விளையாடி வருவதும்** ஒரு ஆய்வறிக்கையில் தெரிய வந்துள்ளது.

தற்போது **மக்களிடம் தொடரும் அதீத செல்போன் பயன்பாடு, அவர்களை இணைய தள அடிமைகளாக மாற்றி வைத்துள்ளது!** மட்டுமல்ல, அவர்களுடைய உணர்வுப் பூர்வமான செயல்பாடுகள் மெல்ல மெல்ல குறைந்து வருகிறது.

**அளவுக்கு அதிகமான நேரம்** இணைய தளத்தோடு கழிக்கும் **செல்போன் பயன்பாடுகள்**, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான **பாதிப்பை ஏற்படுத்தி**, அவர்களுக்கு **மன அழுத்தத்தை** கொடுத்து, **உடல் நலக் கோளாறு**களுக்கு வழி வகுக்கிறது. இப்படிப்பட்ட இணைய தள அடிமை நோயால் **எதிர்காலம் கேள்விக் குறியாகும் சூழலும் உள்ளது**." என்கின்றனர் சில மன நல மருத்துவர்கள்.

இது குறித்து, மறு வாழ்வு மனவியல் நிபுணர்கள் கூறி இருப்பதாவது:

"**கொரோனா**' நோய் தொற்றிற்கு பிறகு செல்போன் உபயோகம் மக்களிடம் பெருகி விட்டது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் **Facebook, Instagram, Twitter** உள்ளிட்டவைகளை நீண்ட நேரம் உபயோகித்து வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் போகும்போது, அவர்கள் அதற்கு **அடிமையாகும் சூழ்நிலைமைதான்** உருவாகிறது. இந்த வகையில் அவர்கள் **இணைய தள அடிமை நோய்**க்கு அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.


உதாரணமாக, நீண்ட நேரம் **Video Games** விளையாடுகிற சில பிள்ளைகளிடத்திலிருந்து செல்போனை வாங்கினால், அவர்களுக்கு **மனச் சோர்வு** ஏற்பட்டு, **தற்கொலை செய்து கொள்ளும் மன நிலை**க்கு போய் விடுவார்கள். அதிலும் **Net Connection** இல்லையென்றால், எதையோ இழந்து விட்டதைப்போல உணர்வார்கள்.

மட்டுமல்ல, **மன அமைதி இல்லாமலும்**, **எரிச்சலூட்டும் மன நிலைமை**யிலும் இருப்பார்கள். தங்கள் உறவினர்களுக்கு கூட முக்கியத்துவம் கொடுக்காமல், செல்போனுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் மன நிலைமையில் இருப்பார்கள். பெரும்பாலும் தூங்கி எழுந்தவுடன் செல்போனை உபயோகிக்கும் பழக்கம் இன்றைய தலைமுறையினரிடத்தில் மிக அதிகமாகவே உள்ளது. இதனால், **குடும்பத்தாரிடம் செலவிடும் நேரம் குறைகிறது**.

வேலைக்குப் போகிற பெற்றோர், தங்கள் பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியே எங்கும் போய் விடக் கூடாது என்பதற்காக, பிள்ளைகளுக்கு வரப் போகிற பாதிப்பை உணராமல், அவர்களுக்கு செல்போனை வாங்கிக் கொடுத்து விடுகின்றனர்.

அதேபோல, சில பிள்ளைகள் மனச் சோர்வு காரணமாகவும் அதிக நேரம் செல்போனை பயன்படுத்தும் சூழல் இருக்கிறது. **மனச் சோர்வுள்ள பிள்ளைகளை அதிலிருந்து வெளியே கொண்டு வருவது மிகவும் கடினமான ஒரு காரியம்.** இப்படிப்பட்ட இணைய தள அடிமை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க, அரசு சார்பில் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது." **நன்றி: 'தினகரன்', 2025 நவ. 3, பக். 12).**

**(தேசத்தில் காணப்படுகிற இப்படிப்பட்ட இணைய தள அடிமைத்தனத்திலிருந்து ஜனங்கள் விடுவிக்கப்பட, அதற்கு காரணமாக இருக்கிற பிசாசின் கிரியைகள் யாவும் கட்டப்பட பாரத்தோடு ஜெபிப்போம்.)**



## நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# நீங்கள் அதிசயங்களை காண்பீர்கள்!

**இயேசு கிறிஸ்து அதிசயமானவர்!** அவரை நோக்கிக் கூப்பிட்ட யாவருக்கும் அவர் அதிசயங்களை செய்தார். உங்களுக்கும் அவர் செய்வார். **நீங்கள் அவரை நோக்கிக் கூப்பிட்டால், உங்களுக்கும் அதிசயங்கள் நடக்கும்!** உங்களுக்காக ஜெபிக்கத்தான் திறப்பின் வாசல் ஜெபத்தை கர்த்தர் ஏற்படுத்தினார். நாங்களும் உங்களோடு இணைந்து, திறப்பின் வாசல் ஜெபத்தில் உங்களுக்காக ஜெபிப்போம்.

கடந்த நாட்களில் ஜெபத்தை கேட்டு, இயேசு கிறிஸ்து செய்த அதிசயங்களில் சிலவற்றை பாருங்கள்:

### பெயர் சொல்லியழைத்து, அற்புதம்!



என் **இருதயத்திலிருந்த** ஒரு **பிரச்சனை**யினால், சுமார் **2 வருடங்களாக அடிக்கடி மயங்கி விழுந்து** விடுவேன். ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள் ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லியழைத்து**, "தேவ கரம் உங்களை தொடுகிறது. நீங்கள் சுகமாகிறீர்கள்!" என்று சொன்னபோது, அந்த தொடுதலை என் சரீரத்தில் நான் உணர்ந்தேன். அந்த வினாடியே **சுகத்தை** பெற்றுக் கொண்டேன். கர்த்தர் என்னை **புதிய அபிஷேகத்தினாலும்** நிரப்பினார். – **ஜானகி**, காட்பாடி.

### கட்டி மறைந்தது!



என் **வயிற்றில்** இருந்த ஒரு பெரிய **கட்டி**யின் நிமித்தமாக மிகுந்த **வேதனை**ப்பட்டேன். என்னால் கொஞ்ச நேரம் கூட **உட்கார முடியாது**. மருத்துவ சிகிச்சையில் பயனில்லை. ஜெப வேளையில் ஒரு மின்னலைப்போல ஆவியானவர் என் மீது இறங்கினார். அந்த நொடிப் பொழுதே **கட்டி மறைந்து** போனது. – **ஜெஸ்ஸிகா**, சென்னை.

### (8 வருட) தலைவலி நீங்கியது!



சுமார் **8 வருட**ங்களாக **ஒற்றைத் தலைவலி**யினால் மிகவும் கஷ்டப்பட்டேன். அந்த **வலி** வரும்போது **தாங்க முடியாமல்**, "எதையாவது வைத்து தலையில் அடித்துக் கொள்ளலாமா? அல்லது, சுவரில் போய் முட்டிக் கொள்ளலாமா?" என்று நினைப்பேன்.

ஜெப வேளையில் ஆவியானவர் என்னை ஆட்கொண்டபோது, **என் சரீரத்தில் ஒரு மாற்றம்** உண்டானதை உணர்ந்தேன். அன்றிலிருந்து **பூரண சுகத்தோடு** இருக்கிறேன். – **சூரியா**, கோவை.

### மரண பயம் விலகியது!

ஒரு **அசுத்த ஆவி**யின் நிமித்தமாக, எனக்குள் உண்டான ஒரு **மரண பயத்தினால் 1½ வருட**ங்களாக கஷ்டப்பட்டேன். அந்த பயம் எப்போதும் எனக்குள் இருக்கும். யாருடைய



துணையும் இல்லாமல் நான் எங்கும் போக மாட்டேன்.

ஜெப வேளையில் தேவ வல்லமை என்னை ஆட்கொண்டபோது, எனக்குள் இருந்த அந்த ஆவி **வெளியேறிப் போனது**. அந்நேரம் முதல், **மரண பயம் நீங்கி**, **விடுதலை**யோடு இருக்கிறேன். – **ரோஸி**, கள்ளக்குறிச்சி.

## தொட்டு சுகமாக்கினார்!



நான் **இயேசு கிறிஸ்துவை அறியாத** ஒரு குடும்பத்தைச் சார்ந்தவள். ஒரு சகோதரி என்னை ஜெபிக்க அழைத்துச் சென்ற இடத்தில் எதிர்பாராத விதமாக கீழே விழுந்து, என் **முழங்கால்களில்** அடிபட்டது. **2 முறை ஆபரேஷன்** செய்தும் சுகம் கிடைக்காமல், **வலி**யினால் **கால்களை மடக்க முடியாமல் 7 வருட**ங்களாக கஷ்டப்பட்டேன். நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தபோது, எதோவொரு வல்லமை என் முழங்கால்களை தொட்டதை உணர்ந்தேன். அந்த வினாடியே **வலி நீங்கி**, **கால்களை மடக்க முடிந்தது**. – **பாக்கிய லெட்சுமி**, சங்கரன்கோவில்.

## சர்ப்பத்தின் ஆவிகள் வெளியேறி விடுதலை!



ஒரு **சர்ப்பத்தின் ஆவி**யினால், சுமார் **30 வருட**ங்களாக பாதிக்கப்பட்டேன். அடிக்கடி என் கண்களுக்கு முன்பாக ஒரு சர்ப்பம் தோன்றி, என்னை பயப்படுத்திக் கொண்டே இருக்கும். **எப்போதும்** எனக்குள் **பயமாக**வே இருக்கும். ஜெப வேளையில் ஆவியானவர் என்னை ஆட்கொண்டபோது, எனக்குள்ளிருந்த அந்த **சர்ப்பத்தின் ஆவி வெளியேறி**ப் போயிற்று. – **ராணி**, களக்காடு.



சுமார் **25 வருட**ங்களாக **3 சர்ப்பத்தின் ஆவி**களினால், மிகவும் பாதிக்கப்பட்டேன். பாடல்-ஆராதனை வேளையில், தேவ வல்லமை என் மீது பலமாக இறங்கியபோது, எனக்குள்ளிருந்த அந்த **3 ஆவிகளும் வெளியேறி**ப் போனதை நான் உணர்ந்தேன். அன்றுமுதல் **விடுதலை**யோடு இருக்கிறேன். – **ஜாண் தர்மராஜ்**, திருப்பூர்.

**பாருங்கள்,** இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்!** உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

**நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.** நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, **விசுவாசத்தோடு ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து** உங்களுக்கும் அற்புதம் செய்து, **உங்கள் துக்கத்தை மாற்றுவார்.**

திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 – மதியம் 3:00 மணிவரை ஜெபிப்போம். **நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள்.** ஜெபத்தில் கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

– உங்கள் சகோதரன்.

**Address:**
**Standing in the Gap Prayer,**
**Nalumavadi-628 211,**
**Thoothukudi Dist., India.**

உங்கள் அற்புதத்தின் நாள்:
**நாலுமாவடி –**
**திறப்பின் வாசல் ஜெபம்!**

**டிசம்பர்**
**27**
(கடைசி சனிக்கிழமை)

# இராமநாதபுரத்தில் இறங்கிய
# எழுப்புதல் அபிஷேகம்!

## [7 மணி நேர] எழுப்புதல் உபவாச ஜெபம்!

"இராமநாதபுரம் மாவட்டத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்க ஒரு உபவாச ஜெபம் நடத்த வேண்டும்." என்று, அங்குள்ள தேவ ஊழியர்கள் சில வருடங்களாக எங்களோடு தொடர்பு கொண்டு அழைப்பு கொடுத்தார்கள்.

அதற்காக ஜெபித்த எல்லோருடைய ஜெபங்களையும் கர்த்தர் கேட்டு, கடந்த (2025) அக். 1ம் தேதியன்று, அங்குள்ள யாஃபா மஹாலில் [7 மணி நேர] **எழுப்புதல் உபவாச ஜெபம்** நடத்த கிருபை பாராட்டினார். இந்த உபவாச ஜெபத்திற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இடங்கள் எல்லாம் நிரம்பி வழியும்படியாக, ஜெபிக்கிற திரளான தேவ பிள்ளைகளை கர்த்தர் கூட்டிச் சேர்த்தார்.



சகோ. சாம் ஜெபராஜ்

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தை குறித்த விபரங்களை ஜனங்கள் மத்தியில் பகிர்ந்து கொண்டு, அவர்களை அர்ப்பணிப்பின் ஜெபத்திற்குள்ளாக வழி நடத்தியபொழுது, வந்திருந்த ஒவ்வொருவரும் தங்களை பரிசுத்தத்திற்கும், ஜெப வாழ்க்கைக்கும் அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

அதை தொடர்ந்து, 'தீர்க்கதரிசி'- சகோ. **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்கள், எழுப்புதலுக்கு விரோதமாக எழும்புகிற தடைகளை மேற்கொள்வதை குறித்து தேவ செய்தியளித்து, ஜெபத்தில் வழி நடத்தியபோது, அத்தனை பேரும் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்.

சகோ. **சாம் ஜெபராஜ்** அவர்கள் யுத்த ஜெபத்தை ஏறெடுத்தபோது, அனைவரும் ஒருமனமாக இணைந்து சாத்தானின் கிரியைகளை அழித்து ஜெபித்தார்கள்.

இறுதியாக நமது சகோதரர் அவர்கள், எலியாவின் ஜெபத்தை மையமாக வைத்து தேவ செய்தியளித்து ஜெபத்தில் வழி நடத்தியபொழுது, எலியாவின் மீது இருந்த ஆவி எலிசாவின் மீது இரட்டத்தனையாக இறங்கியதைப்போல, இந்த உபவாச ஜெபத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவர் மீதும் ஆவியானவர் பலமாக இறங்கியபோது, ஒரு புது பெலனை பெற்றுக் கொண்டனர். ஜெப வேளையில், அனேகர் விடுதலை-சுகம் பெற்று, சாட்சி சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

- ஒருங்கிணைப்பாளர்.





'தீர்க்கதரிசி'- சகோ. வின்சென்ட் செல்வக்குமார்

# இராமநாதபுரம் உபவாச ஜெபத்தில்
## கர்த்தர் எழுப்பிய சாட்சிகளில் சில...

### இரட்டிப்பான சுகம்!



ஒரு மாதமாக கடுமையான **தலை வலி**யினாலும், **காது வலியி**னாலும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், ஒரு தேவ அக்கினி என் சரீரத்தில் இறங்கியதை உணர்ந்தேன். அப்பொழுதே அந்த **வலி**கள் எல்லாம் **நீங்கி**, **சுகத்தை**ப் பெற்றுக் கொண்டேன். – **தேவி**, தொண்டி.

### தோள்பட்டையில் அற்புதம்!


என் **தோள்பட்டை**யில் இருந்த **வலி**யினால், வலது **கையை தூக்க முடியாமல்**, சுமார் **3 வருட**ங்களாக கஷ்டப்பட்டேன்.



ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள், ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி அழைத்து**, தேவ கரம் என்னைத் தொட்டு, எனக்கு சுகத்தை தருவதாகச் சொன்னார்கள். அந்நேரமே **வலி** முற்றிலுமாக **நீங்கி**, **கையை தூக்க முடிந்தது**. – **மகேஸ்வரி**, தொண்டி.

### வலி நீங்கியது!

ஒரு மாதமாக எனக்கு **சளி பிரச்சனை** இருந்தது. குறைந்தது, ஒரு ½ மணி நேரத்திற்கும் மேலாக இருமிக் கொண்டேதான் இருப்பேன். உமிழ் நீரை விழுங்கும் போதும், இருமும் போதும் **தொண்டையில்** கடுமையான **வலி** உண்டாகும். ஜெப வேளையில் ஒரு தேவ வல்லமை என் மீது பலமாக இறங்கியபோது, அந்நேரமே **வலி நீங்கியது**. – **வித்யா**, தொண்டி.



### பெயர் சொல்லியழைத்து, சுகம்!

என் **தோள்பட்டை**யில் இருந்த **வலி**யினாலும், **ஒவ்வாமை**யினாலும் (Allergy), **பாதங்களில்** இருந்த **எரிச்சலினாலும்** 4 மாதங்களாக மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள், ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி அழைத்து**,





"உங்களுடைய ஜெபம் கேட்கப்பட்டது!" என்று சொன்ன அந்த வினாடியே **சுகத்தை** பெற்றுக் கொண்டேன். – **பாத்திமா மேரி**, பரமக்குடி.

### (3 வருட) வேதனை நீங்கியது!

என் வலது **குதிங்காலில்** இருந்த **வலி**யினால், சுமார் **3 வருட**ங்களாக **வேதனை**ப்பட்டேன்.



இரவில் தூங்குவதற்கு முன், அந்த காலை Massage பண்ணி விட்டால்தான் தூக்கமே வரும். மிகுந்த வேதனையோடுதான் கூட்டத்தில் உட்கார்ந்திருந்தேன். ஜெப வேளையில் ஆவியானவர் என்னை ஆட்கொண்டபோது, **பூரண சுகத்தை** பெற்றுக் கொண்டேன். – **பத்மாவதி**, பரமக்குடி.

### (5 வருட) பிரச்சனைகள் நீங்கியது!

சுமார் **5 வருட**ங்களாக



**ஒவ்வாமை**யினாலும் (Allergy), **மன அழுத்த**த்தினாலும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள், ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி அழைத்து** எனக்காக ஜெபித்தபோது, எல்லா **பிரச்சனை**களும் **நீங்கி**, பூரண சுகத்தோடு இருக்கிறேன். – **பாத்திமா பிரியதர்ஷினி**, மதுரை.

### பூரண சுகம் தந்தார்!

சுமார் 2 வருடங்களாக **வயிற்று வலி**யினாலும், **கால் வலி**யினாலும் கஷ்டப்பட்டேன். வலது **கையை தூக்கவே முடியாது**. ஜெப வேளையில் ஆவியானவர் என் மீது அக்கினியாக இறங்கி, எனக்கு **பூரண சுகத்தை** கொடுத்தார். – **பாத்திமா மேரி**, பட்டுக்கோட்டை.



### (10 வருட) வியாதி சுகமானது!

ஒரு குறிப்பிட்ட **வியாதி**க்காக, சுமார் **10 வருட**ங்களாக **மாத்திரை** சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். ஜெப வேளையில் நமது



சகோதரர் அவர்கள், ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி அழைத்து**, கர்த்தர் எனக்கு சுகத்தை தருவதாகச் சொன்னார்கள். அந்த வினாடியே **10 வருட**ங்களாக இருந்த அந்த **வியாதி** முற்றிலுமாக **சுகமானது**. – **ஜெயராஜ்**, பரமக்குடி.

### நீர் வடிவது நின்றது!

**5 மாத**ங்களாக என் இடது **கண்ணிலிருந்து நீர் வடிந்து** கொண்டே இருந்தது. ஜெப வேளையில், நமது சகோதரர் அவர்கள் சொன்னபடியே அந்த கண்ணில் என் கையை வைத்து நான் ஜெபித்தபோது, **நீர் வடிவது** முற்றிலுமாக **நின்று போயிற்று**. – **மணிமேகலை**, கோட்டையூர்.



### கண்களில் பூரண சுகம்!

ஒரு வாரமாக என் **கண்**களில் **வலி** இருந்தது. ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள், ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி அழைத்து**, தேவ கரம் என்னைத் தொட்டு, எனக்கு சுகத்தை தருவதாகச் சொன்னார்கள். அந்நேரமே அந்த **வலி நீங்கியது**. – **ஜெயந்தி**.



### அசுத்த ஆவி வெளியேறி, சுகம்!

**அசுத்த ஆவி**யின் தாக்கத்தினால் எனக்கு **குடலில் புண்** (Ulcer) ஏற்பட்டு, சுமார் **3 வருட**ங்களாக எப்போதும் **எரிச்சலாக**வே இருந்தது.



ஜெப வேளையில் ஒரு தேவ வல்லமை என் மீது பலமாக இறங்கியபோது, எனக்குள்ளிருந்த அந்த **அசுத்த ஆவி வெளியேறி**ப் போயிற்று. அந்நேரமே **பூரண சுகத்தைப்** பெற்றுக் கொண்டேன். – **நட்சத்திரம்**, சிறைக்குளம்.

# 'இயேசு விடுவிக்கிறார்' புதிய வெளியீடுகள்!

**2026ம் ஆண்டிற்கான வாக்குத்தத்தங்கள் அடங்கிய BIBLE LAND காலண்டர் மற்றும் டைரி!**




| காலண்டர் ஒன்றுக்கு | | டைரி ஒன்றுக்கு |
|---|---|---|
| ₹ 30/-. | நேரில் பெற | ₹ 250/-. |
| ₹ 60/-. | இந்தியா முழுவதிலும் இருந்து தபாலில் பெற | ₹ 300/-. |

**For More Details: 83000 11234.**

Online shopping: *India:* jrbibleworld.in
*Foreign:* jrbibleworld.com

## பொங்கல் விடுமுறை நாட்களில்,

நாலுமாவடி - தேவனுடைய கூடாரத்தில்

'இயேசு விடுவிக்கிறார்'

# தீர்க்கதரிசன ஜெப முகாம்!

(3 நாட்கள் உபவாச ஜெபம்)

**2026 ஜனவரி 14, 15, 16.**
(புதன்) (வியாழன்) (வெள்ளி)



**தேவன் பயன்படுத்தும் பாத்திரங்கள்:**

**சகோ. மோகன் சி. லாசரஸ்,**
**சகோ. வின்சென்ட் செல்வக்குமார்,**
**சகோ. சாம் ஜெபராஜ்.**

**கவனிக்க வேண்டிய காரியங்கள்:**

- முன் பதிவு அவசியம்.
- 9 வயதிற்குட்பட்ட சிறு பிள்ளைகள் கட்டாயமாக அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- **வியாதியஸ்தர்களுக்காக, பிசாசின் போராட்டம் மற்றும் தனிப்பட்ட காரியங்களுக்காக ஜெபிக்கப்பட மாட்டாது.**
- 9 வயதுமுதல், 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு தனியாக ஜெபம் நடைபெறும். இதற்கு பதிவு அவசியம்.
- இந்த ஜெப முகாமின் ஒரே நோக்கம் தேசத்திற்காக ஜெபிப்பதுதான். வருகிற (2025) **டிசம்பர் 30ம் தேதிக்குள் முன்பதிவு முடிந்து விடும்.**
- இரட்சிப்பின் நிச்சயம் உள்ளவர்கள், 3 நாட்களும் உபவாசித்து ஜெபிக்க முடிகிறவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
- இந்த ஜெப முகாமின் **பதிவுக் கட்டணம் ₹ 100/-** மட்டுமே.
- ஆண்கள், பெண்கள் தங்குவதற்கென்று தனித் தனியாக இட வசதிகள் உண்டு.

**முன் பதிவு செய்ய:**
**partner.jesusredeems.com**

மேலும் விபரங்களுக்கு: தீர்க்கதரிசன உபவாச ஜெப முகாம்,
இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி-628211, தூத்துக்குடி மாவட்டம்.
Email: revival@jesusredeems.org
அல்லது போன்: 04639-35 33 33, 70947 77783.

Registered with Registered News Paper of India No: 42579/83.
Postal Registration No: TTN/145/2024-2026
Overseas Registration No: TTN/241/2024-2026
Licensed to Post Without Prepayment No: TN/WPP-33/SR/2024-2026
Date of Publication: 25-11-2025.
Date of Posting: 27th to 30th of every month.
Office of Posting: BPC, Tuticorin HO - 628 001.

## நாலுமாவடி, தேவனுடைய கூடாரத்தில்

'இயேசு விடுவிக்கிறார்'

2026 புத்தாண்டு

# வாக்குத்தத்தக் கூட்டம்!

## ஜனவரி 1

(வியாழக்கிழமை)

மதியம் 1:00 - மாலை 5:00.

வாக்குத்தத்தச் செய்தி:

**சகோ. மோகன் சி. லாசரஸ்.**

மேலும் விபரங்களுக்கு:

04639-35 33 33.

## கோயம்புத்தூரில்

'இயேசு விடுவிக்கிறார்' மற்றும் COMFORT திருச்சபை இணைந்து நடத்தும்,

# அற்புதப் பெருவிழா!

2026 ஜனவரி 24,25

(சனி, ஞாயிறு)

நேரம்: மாலை 6:00 மணிக்கு.

இடம்: பின்னர் அறிவிக்கப்படும்.

தேவ செய்தியும், ஜெபமும்:

**சகோ. மோகன் சி. லாசரஸ்**



பாவப் போராட்டமா?
வியாதியின் வேதனையா?
பிசாசின் கட்டுகளா? கவலையா?
கண்ணீரா? கடன் பிரச்சனையா?

அன்புடன் அழைக்கிறோம்! வாருங்கள்!
உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்!

தொடர்புக்கு: **World Revival Prayer Center,**
90, Arts College Road, Carmel Building-2nd Floor,
Near Visalakshi Ladies Hostel, **Coimbatore – 641 018.**
Ph: **0422 - 2309040, 89034 05315.**

எமது முகவரி:

**இயேசு விடுவிக்கிறார்,**
நாலுமாவடி - 628 211,
தூத்துக்குடி மாவட்டம்,
தமிழ்நாடு, இந்தியா.

Office: (+91) 04639-35 33 33
Email: prayer@jesusredeems.org
Vist: www.jesusredeems.com

உங்கள் அவசர ஜெப அழைப்பிற்கு 24 மணி நேரமும்
(+91) 04639-35 35 35 (அல்லது) 22 00 00
என்ற இந்த எண்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

உங்களது அவசர ஜெபக் குறிப்புகளை 24 மணி நேரமும் Whatsapp மூலமாக தெரியப்படுத்த,
**+ 91 94 88 17 53 15.**
(இந்த எண்ணை ஜெபக் குறிப்புகளை அனுப்ப மட்டுமே பயன்படுத்தவும்.)

Our Website

Owned and Published by Bro. Mohan C. Lazarus, Printed by Sis. Joyce Lazarus at Nalumavadi - 13/81, Lakshmipuram, Angel Press and released through Nalumavadi-Jesus Redeems. Editor: Bro. Mohan C. Lazarus